# C.S.I TAMIL CHURCH - OMAN

# "பாலைவன மன்னா"




**மன்னா – 12** **மே 2022** **பிரதி – 2**



# ஆயர் மடல்



விண்ணையும் மண்ணையும் படைத்த ஆண்டவரின் நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்களைத் திருச்சபையின் இறையன்பர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏப்ரல் மாதம் முழுவதும் ஆண்டவர் நம் அனைவரையும் பாதுகாத்தார் நன்றி சொல்லுவோம். உயிர்த்தெழுந்த அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் நம்பிக்கைக் கொண்டு வாழ்வோம்.

ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற புனிதவெள்ளி, உயிர்த்தெழுதல் சிறப்பு ஆராதனைகளிலும், ஏனைய ஆராதனைகளிலும் குடும்பமாய் பங்குகொண்டு சிறப்பித்தீர்கள். லெந்துகால சுயஒறுப்பு காணிக்கை, உயிர்தெழுதல் சிறப்பு கவர் காணிக்கை உற்சாகமாய் படைத்தீர்கள். மேலும் ஒவ்வொரு ஆராதனையிலும் உற்சாகமான காணிக்கை படைக்கிறீர்கள். அனைவருக்கும் நன்றி சொல்லுகிறேன்.

மே மாதம் 27-ம் தேதி நமது சபையின் சபைநாள் விழாவானது நடைபெறுகிறது. இதற்காக ஜெபித்துக்கொள்ளவும். குடும்பமாய் பங்குகொள்ளவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கோடை விடுமுறை காலத்தில் தங்கள் சொந்த ஊர் செல்லும் அனைவரின் பயண பாதுகாப்பிற்காக ஜெபித்துக்கொள்வோம். கோடை காலத்தில் பெலவீனங்கள் வராமல் பாதுகாத்துக்கொள்வோம்.

புதியதாக ஆராதனையில் பற்குகொண்ட அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொள்கிறோம். திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், தேசத்திற்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம்.

**ஜூன்** மாத பாலைவன மன்னா கருப்பொருள் **“கல்வி”** என்னும் தலைப்பில் உங்கள் படைப்புகளைத் தாருங்கள். இறையாசி நம் அனைவரோடும் இருப்பதாக.

**அன்புடன் போதகர்,**
**Rev. S. போவாஸ்**

## ஆயர் அருளுரை

# உயிர்த்தெழுந்த இயேசுவில் விசுவாசம்

### (1கொரிந்தியர் 15:14)



குழம்பிய நிலையில்தான் தெளிந்த சிந்தனை பிறக்கும். குழம்பிய குட்டையில்தான் தெளிந்த தண்ணீர் கிடைக்கும். குழப்பத்திலிருந்துதான் தெளிவு பிறக்கும். தெளிவின்மையிலிருந்துதான் நம்பிக்கை பிறக்கும். இயேசுவின் உயிர்ப்பை முதலில் நம்ப மறுத்தார் தோமா. குழம்பிய நிலையில் இருந்த அவர் இயேசுவை கண்ட பிறகு தெளிவு பெற்றார். உறுதியான விசுவாசத்தை இறுதிவரை தனதாக்கிக்கொண்டார். தெளிவில்லாதவர்களுக்கு தெளிவைக் கற்றுத் தருகிறது தோமாவின் விசுவாசம். இன்பமான நேரங்களிலும், மகிழ்ச்சியான நேரங்களிலும் நமது நம்பிக்கை கரைபுரண்டோடும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் துன்ப நேரங்களிலோ நம் நம்பிக்கை ஆட்டம் காண ஆரம்பிக்கிறது. துன்ப நேரத்தில் நம்பிக்கையை விட்டு விடுவதற்கான சோதனை அதிகமாக இருக்கின்றது. இதனால் பலர் தங்கள் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றனர். இதற்கு மாறாக துன்பங்களை கண்டு அஞ்சாமல் வாழவேண்டும் என்றால் விசுவாசம் அவசியமானது. விசுவாசத்தோடு இருப்பவர்கள் அந்த துன்பங்களை தாங்குவதற்கான உள்ள உறுதியை பெறுகின்றார்கள். மேலும் ஆண்டவரின் பாதுகாப்பையும் பெறுகின்றார்கள். உயிர்த்தெழுந்த இயேசுவில் நாம் விசுவாசம் வைத்தால் அவர் நம் வாழ்வில் எவ்வாறு செயல்படுகிறார் என சிந்திப்போம்.

## 1. அடைக்கலம் கொடுப்பவர்:-

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யூதர்களில் ஒரு குழுவினர் பாலஸ்தீனத்திற்கு வெளியே ரோம அரசின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இவர்களில் பலர் தங்கள் மூதாதையரின் தெய்வமாகிய யாவேயின் மீது கொண்டிருந்த விசுவாசத்தை விட்டுவிட்டு புற இனத் தெய்வங்களை பின்பற்ற ஆரம்பித்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களின் மூதாதையரான இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் ஆண்டவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையினால் விடுதலை பெற்றார்கள்.

தொடக்ககால கிறிஸ்தவர்கள் தாங்கள் கிறிஸ்துவின் மீது கொண்டிருந்த விசுவாசத்தின்பொருட்டு பல்வேறு இன்னல்களுக்கு ஆளானார்கள், புற இனத்தவர்களால் இகழப்பட்டனர். மற்ற யூதர்களால் துரோகிகள் என்றழைக்கப்பட்டனர். இப்படிப்பட்ட இன்னல்கள் காரணமாக கிறிஸ்துவின் மீது அவர்கள் கொண்டிருந்த விசுவாசம் ஆட்டம் காண ஆரம்பித்தது. இத்தகைய

சூழ்நிலையில் ஆபிரகாம் இன்னல்களுக்கு மத்தியில் கடவுள்மீது ஆழமான நம்பிக்கைக் கொண்டிருந்தார் என்பதை தொடக்ககால கிறிஸ்தவர்களும் இதே ஆழமான விசுவாசத்தோடு இருந்தார்கள் என்றால் கடவுளிடம் கொண்டிருந்த ஆழமான விசுவாசம் ஆகும்.

விசுவாசத்தில் நாம் வளர வளர வாழ்வில் வரும் இன்னல்களையும் இடர்பாடுகளையும் மனதைரியத்துடன் சந்திக்கும் மனபக்குவம் பெறுகின்றோம். நாம் அவர் மீது கொண்டிருக்கும் விசுவாசம் ஆழமானதாக இருந்தால் வாழ்வில் வரும் துன்பங்கள் நம் விசுவாசத்தை அதிகப்படுத்துமேலொழிய அழித்து விடுவதில்லை. எனவே ஆபிரகாமை போல எகிப்தில் வாழ்ந்த இஸ்ரவேல் மக்கள்போல ஆழமான விசுவாசம் கொண்டு வாழ அழைக்கப்படுகிறோம்.

## 2. அன்பு செய்கிறவர்:-

ஆண்டவர் மீது விசுவாசம் கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாயிருந்தனர். அவர்களுக்குள் எவரும் தமது உடைமைகளை தம்முடையதாக கருதவில்லை. எல்லாம் அவர்களுக்கு பொதுவாயிருந்தது (அப். 4:32-35).

உண்மையான அன்பிலிருந்துதான் விசுவாசம் பிறக்கும். ஆதி கிறிஸ்தவர்களிடம் உண்மையான விசுவாசம், ஒற்றுமை, அமைதி, தேவைக்கேற்ப பகிர்வு, தெளிவான சிந்தனை இவைகளை மையமாகக்கொண்டு வாழ்ந்ததால்தான் அவர்கள் அனைவரும் பகிர்விலும், நம்பிக்கையிலும் நிலைத்திருந்தனர். பகிர்வையும் விசுவாசத்தையும் இரு கண்களாக கருதினர். நமது விசுவாசமும் செயல் வடிவம் பெற்றதாக அமையவேண்டும். கிறிஸ்தவ வாழ்வு என்பது அன்பின் வழியாய் செயலாற்றும் விசுவாசமே (கலாத்தியர் 5:6). செயலற்ற விசுவாசம் பயனற்றதாகும் (யாக். 2:20). ஆதி கிறிஸ்தவர்கள் நான், எனது, எனது குடும்பம் என்ற குறுகிய மனநிலையை களைந்து நாம், நமது, நமது குடும்பம் என்ற பரந்த நோக்கில் தொலைநோக்கு பார்வையை தமதாக்கிக்கொண்டு வாழ்ந்ததால் அவர்களிடம் போட்டி, பொறாமை, சுயநலம் இவைளிலில்லாமல் சகோதர வாஞ்சையும் பொறுமை நோக்கும் கொண்டு வாழ்ந்தனர். அதுவே அவர்கள் ஆண்டவர் மீது கொண்ட விசுவாசத்தை அதிகரித்தது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் மீது வைத்த அன்பினாலே சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டார். அவரின் காயங்களால் நாம் குணமடைந்துள்ளோம். உயிர்த்த நம் ஆண்டவர் மேல் விசுவாசம் கொண்டு உலகில் மாதிரியாக வாழ்வோம். ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. S.** போவாஸ்

## சிறுவர் பகுதி

# எஜமானிடம் விசுவாசமாய் இருத்தல்



ஒரு காட்டில் மூன்று காட்டுக் குதிரைகள் வசித்தன. ஒரு நாள் ஒருவன் வந்து அவைகளை பிடித்து ஒரு பணக்காரரிடத்தில் விற்றுவிட்டான். எஜமான் குதிரைகளை லாயத்தில் அடைத்து வைத்தான். அவற்றை மூட்டைத் தூக்கவும், மக்களை சுமக்கவும் வண்டி இழுக்கவும் பழக்கினார். இது வேதனையளித்தபடியால் அவைகள் தம் நிலைமையை நினைத்து அழுதன.

ஒரு நாள் லாயத்தின் கதவு திறந்து கிடந்தபடியால் இரண்டு குதிரைகள் ஓடிவிட்டன. சாம்பியன் என்ற மூன்றாம் குதிரை தங்கியிருக்க தீர்மானித்தது. மற்ற இரண்டும் சாம்பியனை கூப்பிட்டன. ஆனால் அது தன் எஜமானோடு தங்கியிருப்பதாக கூறியது. ஒரு வருடம் கடந்தது, தேசத்தில் பஞ்சம் வந்தது. காட்டுக்குதிரைகளுக்குத் தண்ணீரோ புல்லோ கிடைக்கவில்லை. அவை மெலிந்து பெலவீனமாயின.

ஒரு நாள் அவைகள் சாலையில் குதிரையால் இழுத்துச் செல்லப்பட்டதொரு வண்டியைக் கண்டன. எஜமான் வண்டியை சாலையோரம் நிறுத்திவிட்டு தேனீர் குடிக்க சென்றுவிட்டார். இரண்டு குதிரைகளும் அருகே சென்று வண்டியை இழுப்பது தனது நண்பன் சாம்பியன் என்று கண்டன. அவன் கொழு கொழுவென்று மகிழ்ச்சியாக காணப்பட்டான்.

பஞ்ச காலத்திலும் எப்படி இப்படி இருக்கிறாய் என்று குதிரைகள் கேட்டன. அதற்கு சாம்பியன் சொன்னான் “என் எஜமான் என்னை நேசிக்கிறார், எனக்கு உணவளிக்கிறார், என்னை அருமையாக பராமரிக்கிறார். பயிற்சி காலம் வேதனையாகவும், கடுமையாகவும் இருந்தது உண்மைதான். ஆனால் இப்போது எப்படி கெம்பீரமாகவும், பயனுள்ளவனாகவும் இருக்கிறேன் பாருங்கள். நீங்கள் ஏன் ஓடிப் போனீர்கள்?” அப்போது எஜமான் வந்து தட்டிக்கொடுத்து வண்டியை ஓட்டிச் சென்றார். இரண்டு குதிரைகளும் தாங்கள் எடுத்த மதியீனமான தீர்மானத்தை நினைத்து கலங்கின.

கடவுள் நம்மை பயிற்றுவிக்கிறார். அது கடினம்தான். ஆனால் அவர் நம்மை அதிகமாக நேசிக்கிறார், பாதுகாக்கிறார். அவர் நமக்காக தன் ஜீவனையே கொடுத்தார். நாம் எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் ஆண்டவரை விட்டு ஓடிபோகாமல் விசுவாசம் கொண்டு நிலைத்திருந்தால் நாம் பிறருக்கும், இறையரசிற்கும் பயனுள்ளவர்களாவோம்.

**அன்புடன் போதகர்**

## காலத்தை பயன்படுத்துவோம்



**மண்ணில்** : 1873
**விண்ணில்** : 17.05.1960
**ஊர்** : மதுரை
**நாடு** : இந்தியா
**தரிசன பூமி** : இந்தியா, இலங்கை

'காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில் கண்ணீர் விடுவாயே, ஞானத்தில் பரனுனை நாட்டின நோக்கத்தை சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய்' இப்பாடல் வரிகளை நீங்கள் பாடியிருக்கக்கூடும். உண்மையிலே இப்பாடல் வரிகளும் உங்கள் உள்ளத்தில் ஊடுருவி பாய்ந்திருக்கக்கூடும். அவ்வளவு வல்லமையாய் இப்பாடலை எழுதினார் ஒரு போதகர்.

போதகர் பலர் திருச்சபைகளில் பணியாற்றி மறைந்துள்ளார்கள். அவர்களில் மக்கள் மனதில் நீங்காமல் இடம்பெற்றவர்கள் ஒரு சிலரே. அவர்களில் வாழ்க்கையாலும், வார்த்தையாலும் சான்றாக விளங்கி இசைப்பாடல்களால் நீங்கா இடம்பெற்ற சிறந்த ஜெபவீரர் பரமானந்தம் ஐயர் ஆவார். இவர் தாமஸ் உவாக்கர் மிஷனெரியோடு இணைந்து பணியாற்றியவர். மேலும் சாதுசுந்தர்சிங் அவர்களோடு ஐந்தாம் ஆவிக்குரிய கூட்டத்தில் பேசினார்.

1906-ம் ஆண்டு சென்னையில் இறை பணி ஆற்றினார். தமது 36-வது வயதில் குருவாக அபிஷேகம் பண்ணப்பட்ட இவர், பல இடங்களுக்கும் சுற்றுப்பயணம் செய்து, இறைவனின் அருட்பணியை வல்லமையாக செயல்படுத்தினார். இவர் ஒரு ஒப்பற்ற கிறிஸ்தவ வீரர். ஆன்மீக எழுப்புதல் பிரசங்கி. இறையியல் கொள்கைகளை வலியுறுத்தி விசுவாச கோட்பாடுகளை நிலைநிறுத்த வேண்டுமென்று தீவிரமாக உழைத்தவர். அதற்காக ஜெபித்தவர். உரைநடை பொழிவதில் இவர் ஒரு அருவி. ஓயாது பாடும் குருவி. திருமறையை விளக்கும் கருவி.

இவர் 13 நூல்களை எழுதியுள்ளார். இவை யாவும் இறைஉணர்வை வளர்ப்பதாகவும், மறையுணர்வைப் பெருக்குவதாகவும், நல்லொழுக்க நெறியில் வளர்ப்பதாகவும் அமைகின்றது. இவர் எழுதிய 11 கீர்த்தனைகள், ஆண்டவரின் அருளைப் பெறவேண்டி ஜெபிக்கும் ஜெபங்களாக அமைந்துள்ளது. "எந்நாளுமே துதிப்பாய்", "என் ஆத்துமாவே நீ எந்நாளுமே துதிப்பாய்" என்ற பாடலும் இவர் எழுதியதே. தமது போதனைகளாலும் சாதனைகளாலும் தமிழ்நாட்டு மக்களின் அறிவுக்கண்களையும், ஆன்மீகக்

கண்களையும் அகலத் திறந்த இவர், மே 17ம் தியதி 1960-ல் இறைவன் புகழ்பாடச் சென்றார்.

அன்பரே! இவ்வுலக மக்களுக்கு நீங்கள் அருளும் அருட்கொடை என்ன?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** இரட்சிப்பு வேண்டும், மோட்சம் வேண்டும் என்று கேளாமல் கிறிஸ்துவைத் தேடி அவர் வழியில் நடப்பதே முக்கியம். – பரமானந்தம் ஐயர்

**குயவனின் கரங்களில்:** ஆண்டவரே! உம் திருப்பணி செய்ய எந்தனை ஒப்புவிக்கிறேன்.

**தியானத்திற்கு** : யோசுவா 1, ஏசாயா 7, 1தெச. 1-2).

## மகளிர் பகுதி

## “ஐரோப்பாவின் முதல் கிறிஸ்தவ பெண்”

(அப்போஸ்தலர் 16:14)

கப்பல்கள் கரையிலே கண்ணுக்கு அழகாக நின்று கொண்டிருக்குமானால் அதனால் யாருக்கும் எப்பயனும் விளையப்போவதில்லை. கடலின் அலைகளை கிழித்துக்கொண்டும், வீசும் சூறாவளிக் காற்றிலும், மழையிலும், கடலின் சீற்றத்திலும் துணிந்து பயணிக்கும்போதுதான் அது போய் சேரவேண்டிய இலக்கை அடையமுடியும்.

நற்செய்தியை அநேகமுறை கேட்டும் அதற்கு செவிகொடாமல் இருக்கும் ஒரு பெருங்கூட்டம் இந்த உலகில் இருக்கும்போது, ஒரு சிலர் மட்டும் தங்கள் வாழ்வை நற்செய்திக்கென்று ஒப்புக்கொடுத்து இருக்கிறார்கள். ஆதித் திருச்சபை உருவாக்கப்பட்ட காலத்தில் பெண்கள் திருச்சபைக்கு வித்துக்களாகவும், தூண்களாகவும், பணி செய்தார்கள். இவர்களில் வெகு சிலரின் பெயர்கள்தான் திருமறையில் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்களில் ஒருவர்தான் ‘லீதியாள்’. ஐரோப்பா கண்டத்தில் முதன் முதலாக கிறிஸ்துவுக்குள் வழிநடத்தப்பட்ட பெண் இவள்தான். இவளைக் குறித்து சிந்திப்போம்.

### 1. உயர்தரமானவள்:-

லீதியாள் தியத்தீராவை சார்ந்தவள். ‘தியத்தீரா’ என்பது மாசிதோனியா பகுதியின் முக்கிய நகரமான பிலிப்பியில் அமைந்துள்ளது. இது ஐரோப்பா கண்டத்தின் கிரேக்க நாட்டை சார்ந்த பகுதி. துணிநெய்தல், துணிக்கு சாயம் பூசுதல், மண்பாண்டம் செய்தல், வெண்கலத்தால் பாத்திரங்களை செய்தல் போன்ற தொழில்கள் இந்த பட்டணத்தின் சிறப்பு தொழில்களாய் காணப்பட்டிருந்தன.

லீதியாள் சமுதாயத்தில் மிக உயர்தரமாய் எண்ணப்பட்ட சந்ததியை சார்ந்தவள், யூதம் சாராதவள் ஆயினும் யூதர்களின் வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவள். பட்டுத் துணிகளை விற்பவள் எனவே செல்வச் செழிப்புமிக்கவளாய் இருந்தாள். ஓய்வுநாளில் வியாபாரம் செய்யாமல் ஆராதனைக்குச் செல்வாள். அவள் சார்ந்து இருந்த கிரேக்க இனத்தினருக்கு ஓய்வுநாள் ஆசரிப்பு கிடையாது. லூக்கா லீதியாளைப் பற்றி




எழுதும்போது Seboner என்ற கிரேக்க வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். இதன் பொருள் யூதரல்லாவிட்டாலும் யூத மதத்தின் மீது பற்றுக்கொண்டு யூத முறைப்படி தொழுகை கூடங்களில் தொழுபவர்கள் என்று பொருள். லீதியாள் பெரிய அளவில் வியாபாரம் செய்தும், செல்வ செழிப்புடனும் வாழ்ந்ததால் அவள் அப்பகுதி மக்களுக்கு அதிகம் அறிமுகமானவளாக இருந்தாள். அவளது உயர்தகுதி காரணமாக சொந்த பெயரால் அழைக்கப்படாமல் ஊர்ப் பெயரை வைத்தே அறியப்பட்டாள்.

## 2. உன்னதரை உயர்த்தினவள்:-

பிலிப்பி பட்டணத்தில் ஜெப ஆலயம் இல்லை. இதனால் பவுல், சீலா போன்றோர் ஆற்றங்கரைக்கு சென்று இயேசுவைக் குறித்து பிரசங்கித்து வந்தார்கள். இதனை அறிந்துகொண்ட இவள் அங்குசென்று அவர்கள் கூறும் இறை வார்த்தையை கேட்பதை வழக்கமாக கொண்டிருந்தாள். லீதியாள் உயிர்த்தெழுந்த இயேசுவில் விசுவாசம் கொண்டது மட்டுமல்ல உடனே அவள் திருமுழுக்கு பெற்றாள். அதோடு நின்றுவிடாமல் அவளது மொத்த குடும்பத்தினரையும் மனம் மாற செய்தாள். எனவே ஐரோப்பாவின் முதல் கிறிஸ்தவ குடும்பமாக லீதியாளின் குடும்பம் திகழ்ந்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதற்கு பிற்பாடு ஊர் ஊராக சென்று இயேசுவைக் குறித்து சொன்னாள். தேடுகின்ற உள்ளத்தில் தேவன் தங்குவார். தீராத தொல்லைகளை தீர்த்து முடிப்பார் என்று பக்தன் பாடுகின்றார். நாம் நமது உள்ளத்தில் ஆண்டவரைத் தேடினால் அவர் நமது உள்ளத்தில் வருவார். லீதியாள் ஆண்டவரில் விசுவாசம்கொண்டு அவரைத் தேடினாள். அவள் வீட்டாரும் நாட்டாரும் ஆண்டவரை கண்டுகொள்ள முடிந்தது. நாமும் ஆண்டவரில் விசுவாசம்கொண்டு அவரைத் தேடுவோம். அவரைக் குறித்து பிறருக்கு அறிவிப்போம். சாட்சிகளாய் வாழ்வோம். ஆமென்!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி. M. R. பெக்ஸிலின் போவாஸ்**

## எண்கள் ~ தொடர்

### எண் ஒன்பது:-

**a. நன்றி கெட்ட தொழுநோயாளிகள் 9 பேர்:-**

இயேசு நாதர் தன் இறைப்பணி நாட்களில் அநேக அற்புதங்களை செய்தார். அவரிடமிருந்து அற்புதங்களை பெற்றுக்கொண்டோர் பலர். சிலர் நன்றியுள்ளவர்களாயிருந்தார்கள். பலர் நன்றியில்லாதவர்களாயிருந்தார்கள். தொழுநோயிலிருந்து சுகம்பெற்ற 10 பேரில் ஒன்பதுபேர் நன்றியற்றவர்களாயிருந்தார்கள். ஆக நன்றிகெட்ட தொழுநோயாளிகள் 9 பேர். லூக்கா 17:12-17.

**b. ஆவியின் கனி ஒன்பது:-**

1. அன்பு, 2. சந்தோஷம், 3. சமாதானம், 4. நீடிய பொறுமை, 5. தயவு, 6. நற்குணம், 7. விசுவாசம், 8. சாந்தம், 9. இச்சையடக்கம்

## *New Arrivals*

### "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"



**Boy baby**
**S/o Mr. M. Sujin & Mrs. C. Jasphin Vinoja**
**23-03-2022**

**Master. Aadric Nivin**
**S/o Mr. C. A. Vinu & Mrs. Reny Thresia**
**15-04-2022**

## வாழ்த்துகிறோம்!

### "இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"



கர்த்தருடைய கிருபையால் ஏப்ரல் மாதம் 25-ம் தேதி பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

**Mr. R. Shaju & Mrs. S.H. Christal Dinesha**

தம்பதியினரை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – ஏப்ரல் 2022




பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஆண்கள் சங்கத்தின் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏப்ரல் மாதத்திற்கான ஆண்கள் சங்க கூடுகை 21-04-2022 அன்று போதகர் அருள்திரு. போவாஸ் அவர்கள் தலைமையில் இரவு 9 மணிக்கு ஜெபத்துடன் ஆரம்பமானது. அதில் ஆவிக்குரிய பாடல்கள் பாடப்பட்டது.

பின்பு ரோமர் 12:1-13 வரை வேதபாடம் வாசிக்கப்பட்டது. அதன்பின் ரோமர் 12:12-ன் படி 1. நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள் 2. உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள் 3. ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள் என்ற தலையங்கத்தில் திரு. ராபின் தேவதாஸ் அவர்கள் செய்தியை பகிர்ந்துகொண்டார்கள். 1கொரிந்தியர் 13:13-ன் படி அன்பே பெரியது என்றும் அதில் நம்பிக்கையாய் சந்தோஷமாயிருங்கள் என்று வெளி 2:10-ன் படி உபத்திரவத்தில் பொறுமையாய் இருங்கள் என்றும் அதன் மூலம் ஜீவகிரீடத்தை பெறுவீர்கள் என்றும் யாக்கோபு 5:16-ன் படி ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள் என்றும் நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என்றும், அப்போஸ்தலர் 16:25,26-ன் படி நடுராத்திரியில் பவுலும், சீலாவும் ஜெபம்பண்ணி அதன்மூலம் வெற்றி கண்டார்கள் என்றும் அருமையான ஒரு செய்தி பகிரப்பட்டது. பங்குகொண்ட அனைவருக்கும் ஆசீர்வாதமாய் அமைந்தது. தொடர்ந்து கொடுக்கப்பட்ட ஜெபக்குறிப்புகளுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

இரவு 10 மணியளவில் போதகரின் ஆசீர்வாத ஜெபத்துடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது. கூடுகை அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது.

இந்த நாளுக்குரிய பங்கைக்கொடுத்து ஆண்டவரை மகிமைப்படுத்தியவர்கள் Mr. Ananth & Mr. Andrew சகோதரர்களுக்கு ஆண்கள் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வருகின்ற மாதத்திலும் ஆலயத்தில் உள்ள ஆண்கள் அனைவரும் இந்த கூடுகையில் கலந்துகொண்டு ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்துவோம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

**இவண்,**
**ஆண்கள் சங்க செயலர் சார்பில்,**
**திரு. ஆஸ்டின் டேனியல்**
**(ஆண்கள் சங்க கணக்கர்)**

# பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – ஏப்ரல் 2022




நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் திருச்சபையின் அனைவருக்கும், பாலைவன மன்னா வாசகர்களுக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தரின் கிருபையினால் ஏப்ரல் மாதத்தின் பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை ஏப்ரல் மாதம் 21-ம் தேதி CSI Malayam hall-ல் வைத்து நடைபெற்றது. பெண்கள் ஐக்கிய சங்க செயலர் திருமதி. சாரா ராஜா சிங் ஆரம்ப ஜெபம் ஏறெடுத்து, ஸ்தோத்திர பாடல் பாடப்பட்டு கூடுகை இனிதே ஆரம்பமானது.

கர்த்தருடைய வார்த்தையை போதகர் அம்மா திரு. பெக்ஸிலின் போவாஸ் அவர்கள் பகிர்ந்தளித்தார்கள். வேதபாடமாக யோசுவா 15:13-19 வசனங்கள் வாசிக்கப்பட்டு **“நன்மையைப் பெற்றுக்கொண்ட அக்சாள்”** என்ற தலைப்பில் இறை வார்த்தையை அளித்தார்கள். அக்சாளைப் பற்றி பின்வரும் இரு குறிப்புகளின் அடிப்படையில் விவரித்துக் கூறினார்கள்.

1. கீழ்ப்படிதலினால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டாள்.
2. மனத்தாழ்மையினால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டாள்.

செய்தி வந்திருந்த யாவருக்கும் பிரயோஜனமாக இருந்தது. செய்தியை பகிர்ந்தளித்த போதகர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறேன்.

பின் ஜெபவேளையை திருமதி. சாரா ராஜாசிங் வழிநடத்தினார்கள். கொடுக்கப்பட்ட ஜெபக்குறிப்புகளுக்காக சங்கத்தினர் பாரத்தோடு திருச்சபைக்காக, மிஷனெரிகளுக்காக, குடும்பங்களுக்காக, ஓமான் மற்றும் இந்திய தேசங்களுக்காக ஜெபித்தார்கள். பின்னர் பெண்கள் சங்க ஆண்டு தேர்வு பகுதியான லூக்கா சுவிசேஷத்தின் 1 முதல் 4 அதிகாரங்கள் முடியவுள்ள பகுதியிலிருந்து வினா விடைகள் கலந்துரையாடப்பட்டது. அதன்பின் சாட்சி வேளையில் தேவன் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை கர்த்தருடைய நாம மகிமைக்காக சாட்சியாக அறிவித்தார்கள்.

ஏப்ரல் மாத பெண்கள் ஐக்கிய சங்க கூடுகையை தாங்கினவர்கள்,

1. Aspin Bejo
2. Golden Irene Sheeja Robin

அவர்களுக்கு பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கர்த்தர்தாமே அவர்கள் குடும்பத்தினை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

நிறைவாக சாட்சி சொன்னவர்களுக்காகவும், கூடுகையை தாங்கினவர்களுக்காகவும் Mrs. Nisha Broosewelt அவர்கள் ஜெபித்து கூடுகை இனிதே நிறைவுபெற்றது. வருகிற மாதங்களில் நமது திருச்சபையின் அனைத்துப் பெண்களும் பெண்கள் ஐக்கிய சங்க கூடுகையில் பங்குபெற்று இறை ஆசி பெறுமாறு அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

**இவண்**

**பெண்கள் ஐக்கிய செயலர்**
**திருமதி. சாரா ராஜாசிங்**

**பின்குறிப்பு:-** இந்த வருட பெண்கள் ஐக்கிய சங்க ஆண்டு தேர்வு வருகிற அக்டோபர் மாதம் நடைபெறும்.

**தேர்வு பகுதி:-** லூக்கா எழுதின சுவிசேஷம் முழுவதும்.

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள் ~ மே 2022

| | |
|---|---|
| 06-05-2022 | வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : PCO Old Main Hall / நேரம்: மாலை 5:15 – 7:15 |
| 13-05-2022 | வெள்ளி ஆராதனை<br>இடம் : PCO Old Main Hall / நேரம்: மாலை 5:15 – 7:15 |
| 19-05-2022 | வியாழன் - பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–10:15 |
| 19-05-2022 | வியாழன் - ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : மார்த்தோமா ஹால் / நேரம்: இரவு 9:00–10:00 |
| 20-05-2022 | வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : PCO Old Main Hall / நேரம்: மாலை 5:15 – 7:15 |
| **27-05-2022** | **வெள்ளி – சபை நாள் விழா ஆராதனை**<br>இடம் : PCO Old Main Hall / நேரம்: மாலை 5:15 – 7:15 |
| 01-06-2022 | புதன் - அருணோதய ஆராதனை<br>இடம் : --- ஹால்/ அதிகாலை 5:00 – 6:00 |
| 02-06-2022 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: இரவு 9:00 – 10:30 |
| 03-06-2022 | வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : PCO Old Main Hall / நேரம்: மாலை 5:15 – 7:15 |

## மே 2022 மாத கேள்விகள்
### (பிலிப்பியர் முதல் கொலோசெயர் முடிய)

1. இரட்சிப்பு நிறைவேற எவ்வாறு பிரயாசப்படவேண்டும்?
2. எது கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் வரும்?
3. நியாயப்பிரமாணத்தின்படி நான் யார்?
4. பிலிப்பியர் எது முதல் சுவிசேஷத்திற்கு உடன்பட்டவர்கள்?
5. தன் கையினால் எழுதி மக்களை வாழ்த்துவது யார்?
6. உலகத்திலே எதைப்போல் பிரகாசிக்கிறீர்கள் என பவுல் கூறுகிறார்?
7. எதை செய்தாலும் ________ செய்யுங்கள்.
8. பக்திவைராக்கியத்தின்படி சபையை துன்பப்படுத்தியது யார்?
9. எதில் மாத்திரம் நீங்கள் எனக்கு உடன்பட்டீர்கள்?
10. இயேசு கிறிஸ்துவினால் வருவது எது?
11. எதை நாடுங்கள்?
12. பவுல் எவ்விரண்டில் நெருக்கப்பட்டார்?
13. ஒரே சிந்தையாயிருக்க பவுல் யாருக்கு புத்திசொல்லுகிறார்?
14. மகிமையின் நம்பிக்கையாக இருப்பது யார்?
15. எதைத் தரித்துக்கொள்ளுங்கள்?
16. எந்த பொக்கிஷங்கள் அவருக்குள் அடங்கியிருக்கிறது?
17. காவலிலிருந்து வாழ்த்து சொன்னது யார்?
18. எதில் அதிகமாய் துணிந்திருக்கிறார்கள்?
19. செய்திகளை என் உடன் வேலையாள் உங்களுக்கு அறிவிப்பான் என யாரைக் குறிப்பிடுகிறார்?
20. நம்முடைய குடியிருப்பு எங்கிருக்கிறது?

## ஏப்ரல் 2022 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. தேவனுடைய சர்வாயுதவர்க்கம் - எபேசியர் 6:11
2. கிறிஸ்து – கலாத்தியர் 3:16
3. சீனாய் மலையிலுண்டான ஏற்பாடு – கலாத்தியர் 4:24
4. வெளியரங்கமாக்குகிறது – எபேசியர் 5:13
5. யாக்கோபு, கேபா, யோவான் - கலாத்தியர் 2:9
6. ஆபிரகாம் - கலாத்தியர் 3:6
7. கிறிஸ்துவின் இரத்தத்தினால் - எபேசியர் 2:13
8. இரட்சிப்பு – எபேசியர் 2:8
9. பொல்லாத பிரபஞ்சத்தினின்று – கலாத்தியர் 1:4
10. ஆகார் - கலாத்தியர் 4:25
11. வலதுகை கொடுத்தல் - கலாத்தியர் 2:9
12. ஆவியானவர் - எபேசியர் 1:14
13. நற்கிரியை – எபேசியர் 2:10
14. பதினாலு – கலாத்தியர் 2:1, மூன்று வருஷம் - கலாத்தியர் 1:18
15. நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளில் நிலைத்திராதவன் - கலாத்தியர் 3:10
16. ஆவியின் ஒருமையை காத்துக்கொள்ள – எபேசியர் 4:3
17. கிருபை – எபேசியர் 3:7
18. பவுல் - எபேசியர் 3:8
19. விருத்தசேதனம் - கலாத்தியர் 5:2
20. அன்பினாலே ஊழியம் செய்யவேண்டும் - கலாத்தியர் 5:13

## ஏப்ரல் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Leela Gladson |
| Mrs. Aspin Bejo | Mrs. Manju Martin |
| Mrs. Boopathi Baskar | Mrs. Percy Jean |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Felsi Rani John | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Virgin Jegatha Jino |

## மே 2022 மாத கேள்விகள்

## (எசேக்கியேல் 6 முதல் 15 முடிய)

1. எதினால் தேசம் நிறைந்திருக்கிறது?
2. எதை சிதறப்பண்ணுவேன் என கர்த்தர் கூறுகிறார்?
3. இருபத்தைந்து புருஷர் எங்கு இருந்தார்கள்?
4. வாசல் எங்கு இருந்தது?
5. மண்சுவரை எது பிளக்கும்?
6. அக்கினியை எடு என யாரிடம் கூறப்பட்டது?
7. பட்டயம், பஞ்சம், கொள்ளைநோயினால் விழுவார்கள் - யார்?
8. திராட்சச் செடியை அக்கினிக்கு இரையாக ஒப்புக்கொடுத்ததுபோல எதை ஒப்புக்கொடுப்பேன் என கர்த்தர் கூறுகிறார்?
9. பட்டயத்தால் சாவது யார்?
10. நீ அப்பத்தை எவ்வாறு புசி என்று கர்த்தர் கூறினார்?
11. தேசம் எதினிமித்தம் பாழாகும்?
12. எது செட்டைகளை விரித்து எழும்பின?
13. எங்கு 6 புருஷர்கள் நின்றார்கள்?
14. நடையிலே இருந்தது எது?
15. அவமாகுவது எது?
16. கேருபீன்களின் சத்தம் எங்கு கேட்கப்பட்டது?
17. தாங்கள் மாத்திரம் தப்பும் 3 புருஷர்கள் யார்?
18. விருட்சங்களின் கீழ் தழைத்திருக்கிற நான் யார்?
19. இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் யாருக்கு ஒப்பாய் இருக்கிறார்கள்?
20. எது இராமல் ஒழிந்துபோகும்?

## ஏப்ரல் 2022 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கொள்ளைநோய் - எசேக்கியேல் 5:12
2. பஞ்சம், துஷ்டமிருகம் - எசேக்கியேல் 5:17
3. நரிகள் - புலம்பல் 5:18
4. கேபார் - எசேக்கியேல் 1:1
5. இஸ்ரவேல் வம்சத்தார் - எசேக்கியேல் 3:17
6. சுருள் - எசேக்கியேல் 2:9
7. ஓய்வுநாள் - புலம்பல் 1:7
8. சீயோன் குமாரர் - புலம்பல் 4:2
9. சீயோன் குமாரத்தியின் மூப்பர்கள் - புலம்பல் 2:10
10. ஏதோம் குமாரத்தி – புலம்பல் 4:22
11. பாதைகள் - புலம்பல் 3:9
12. சுருள் - எசேக்கியேல் 3:1
13. மனுஷ - எசேக்கியேல் 1:5
14. இஸ்ரவேல் புத்திரர் - எசேக்கியேல் 2:3
15. எருசலேம் - புலம்பல் 1:8
16. பட்சி – புலம்பல் 3:52
17. சீயோனின் ஸ்திரீகள், யூதாவின் கன்னிகைகள் - புலம்பல் 5:11
18. தண்ணீர் - புலம்பல் 2:19
19. அப்பம் - எசேக்கியேல் 4:17
20. 390 – எசேக்கியேல் 4:5

## ஏப்ரல் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Prince J. P. |
| Mr. Anu R. | Mr. Pushphakaran |
| Mr. Bejo Nelson | Mr. Ramesh R. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Robin Devadhas |
| Mr. Jino John | Mr. Sujith Gladson |
| Mr. Justus Martin | |

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.

2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.

3. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.

4. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.

2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.

3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு மத சார்பின்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

2. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

3. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

4. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## உலக நாடுகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. உலக நாடுகளின் சமாதானத்திற்காக குறிப்பாக ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு இடையே நடக்கும் போர் முடிவுக்கு வரவும், இந்த போரினால் ஏற்பட்ட இழப்புகளிலிருந்து இரு நாடுகளும் மீண்டு வரவும் ஜெபிப்போம்.

2. பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்காக குறிப்பாக இலங்தை தேசத்திற்காக பாரத்தோடு ஜெபிப்போம்.

*May God Bless All*

## Birthday Celebrants – May 2022

| | |
|---|---|
| 02nd May | Mr. Atheesh |
| 03rd May | Master. Jaydon Immanuel, S/o Mr. Ramesh |
| 03rd May | Master. Rishan Robin Garwin, S/o Mr. C.D. Robin Raj |
| 05th May | Mr. Jegan Broose |
| 07th May | Miss. Eunice Drusilla, D/o Mr. Robin Devadhas |
| 09th May | Mr. Bejo Nelson |
| 09th May | Master. Jesien Manoj, S/o Mr. Justus Martin |
| 09th May | Miss. G.M. Johnsey Gobisha, D/o Mr. Gobinath |
| 10th May | Mrs. Gracilin Melba, W/o Mr. Sujin |
| 10th May | Mrs. Rabboni Robin, W/o Mr. C.D. Robinraj |
| 11th May | Miss. D. Joyce Davina, D/o Mr. Dhinakaran |
| 11th May | Mr. N. Selvakumar |
| 12th May | Mr. Moorthy |
| 12th May | Mrs. Virgin Jegatha, W/o Mr. Jino John |
| 13th May | Mr. J. Gnanadhas |
| 17th May | Mr. C. Stalin |
| 18th May | Master. Dani J. Bose, S/o Mr. Jose Chandra Bose |
| 18th May | Mr. Johnson Raj |
| 18th May | Mrs. Susamma |
| 20th May | Mrs. Kala, W/o Mr. Jegan Broose |
| 20th May | Mrs. Synthia, W/o Mr. Srinivas |
| 21st May | Master. S. Dino, S/o Mr.C. Sujin |
| 22nd May | Mrs. Sangeeth Johns, W/o Mr. Augustin |
| 25th May | Mrs. Jeya Rani, W/o Mr. Victor |
| 27th May | Mr. G. Jabastin |
| 27th May | Master. Rishon, S/o Mr. Ramji |
| 28th May | Mr. Gobinath |
| 29th May | Mr. Sujith Gladson |

## Wedding day Anniversaries – May 2022

| | |
|---|---|
| 01st May | Mr. Ramji & Mrs. Sterbie |
| 04th May | Mr. Ashok & Mrs. Angel |
| 05th May | Mr. Selvakumar & Mrs. Wiselin Shalisa |
| 05th May | Mr. S. Kannan & Mrs. Vency Deepa |
| 05th May | Mr. T.N. Brejin & Mrs. Rupa |
| 06th May | Mr. Jean C.R. Shibin & Mrs. Percy |
| 07th May | Mr. Alex Baskar & Mrs. Boopathi |
| 07th May | Mr. Winson & Mrs. Hema |
| 07th May | Mr. Benny Moses & Mrs. Jeevlin Esther |
| 10th May | Mr. Kanagavel & Mrs. Priyadarsini |
| 10th May | Mr. Bensam & Mrs. Gracelin Rani |
| 12th May | Mr. Victor Thaya Singh & Mrs. Jeya Rani |
| 16th May | Mr. Selvamani & Mrs. Vimala |
| 25th May | Mr. Kingsly & Mrs. Mary Suja |
| 25th May | Mr. Jegan Broose & Mrs. Kala |
| 25th May | Mr. Rex Macedo & Mrs. Geetha |

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ மே 2022

| | | |
|---|---|---|
| 06-05-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Binita Pratheesh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Daniel Raj |
| 13-05-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Borish Shiny Rejicilin |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Dhinakaran |
| 20-05-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Divya Darling Kasiraja |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Gnana Ruban T. |
| 27-05-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Committee member |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Committee member |
| 03-06-2022 | முதலாம் திருமறைப்பகுதி | Miss. Fanny Santa Gnanadhas |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Gnanadhas J. |

# அனுதின மன்னா – மே 2022

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| மே 1 | ஞாயிறு | சங்கீதம் 119:1-8 | சங்கீதம் 119:1 | 1நாளா. 21-23 |
| மே 2 | திங்கள் | ஆமோஸ் 9:8-15 | ஆமோஸ் 9:14 | 1நாளா. 24-26 |
| மே 3 | செவ்வாய் | உபா. 30:1-10 | உபா. 30:9 | 1நாளா. 27-29 |
| மே 4 | புதன் | சங்கீதம் 81:1-16 | சங்கீதம் 81:16 | 2நாளா. 1-4 |
| மே 5 | வியாழன் | எரேமியா 7:1-7 | எரேமியா 7:7 | 2நாளா. 5-7 |
| **மே 6** | **வெள்ளி** | **சங்கீதம் 138:1-8** | **சங்கீதம் 138:3** | **2நாளா. 8-11** |
| மே 7 | சனி | உபாகமம் 4:1-10 | உபாகமம் 4:7 | 2நாளா. 12-16 |
| மே 8 | ஞாயிறு | நியா. 6:11-18 | நியா. 6:12 | 2நாளா. 17-19 |
| மே 9 | திங்கள் | நீதி. 24:1-14 | நீதி. 24:5 | 2நாளா. 20-22 |
| மே 10 | செவ்வாய் | ஏசாயா 12:1-6 | ஏசாயா 12:5 | 2நாளா. 23-25 |
| மே 11 | புதன் | ஏசாயா 40:25-31 | ஏசாயா 40:31 | 2நாளா. 26-29 |
| மே 12 | வியாழன் | 1சாமு. 17:32-47 | 1சாமு. 17:45 | 2நாளா. 30-32 |
| **மே 13** | **வெள்ளி** | **எரேமியா 10:1-18** | **எரேமியா 10:6** | **2நாளா. 33-34** |
| மே 14 | சனி | ஏசாயா 60:1-10 | ஏசாயா 60:1 | 2நாளா. 35-36 |
| மே 15 | ஞாயிறு | பிலிப். 4:1-13 | பிலிப். 4:4 | எஸ்றா 1-4 |
| மே 16 | திங்கள் | எபிரெ. 4:12-16 | எபிரெ. 4:16 | எஸ்றா 5-7 |
| மே 17 | செவ்வாய் | ஆபகூக் 3:1-19 | ஆபகூக்3:17,18 | எஸ்றா 8-10 |
| மே 18 | புதன் | மாற்கு 5:22-34 | மாற்கு 5:34 | நெகே. 1-4 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| மே 19 | வியாழன் | லூக். 4:14-24 | லூக். 4:21 | நெகே. 5-7 |
| **மே 20** | **வெள்ளி** | **1கொரி. 1:18-31** | **1கொரி. 1:27** | **நெகே. 8-10** |
| மே 21 | சனி | யாக். 5:1-20 | யாக். 5:9 | நெகே. 11-13 |
| மே 22 | ஞாயிறு | 2கொரி. 12:1-12 | 2கொரி. 12:10 | எஸ்தர் 1-4 |
| மே 23 | திங்கள் | எண். 24:1-11 | எண். 24:1 | எஸ்தர் 5-10 |
| மே 24 | செவ்வாய் | நெகே. 8:1-10 | நெகே. 8:10 | யோபு 1-4 |
| மே 25 | புதன் | 1இரா. 19:1-14 | 1இரா. 19:6 | யோபு 5-8 |
| மே 26 | வியாழன் | யோபு 6:1-14 | யோபு 6:8 | யோபு 9-12 |
| **மே 27** | **வெள்ளி** | **சங்கீதம் 8:1-9** | **சங்கீதம் 8:5** | **யோபு 13-17** |
| மே 28 | சனி | 2கொரி. 13:1-14 | 2கொரி. 13:11 | யோபு 18-21 |
| மே 29 | ஞாயிறு | மீகா 5:1-15 | மீகா 5:9 | யோபு 22-26 |
| மே 30 | திங்கள் | 1பேதுரு 4:1-19 | 1பேதுரு 4:8 | யோபு 27-30 |
| மே 31 | செவ்வாய் | 1கொரி. 15:1-17 | 1கொரி. 15:17 | யோபு 31-34 |
| ஜுன் 1 | புதன் | பிலிப். 3:1-21 | பிலிப். 3:14 | யோபு 35-38 |
| ஜுன் 2 | வியாழன் | ரோமர் 8:1-16 | ரோமர் 8:16 | யோபு 39-42 |
| **ஜுன் 3** | **வெள்ளி** | **மத்தேயு 25:1-13** | **மத்தேயு 25:13** | **சங்கீதம் 1-7** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 5:15 – 7:15<br>இடம் : **PCO old main hall** |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 5:15 – 7:15<br>இடம் : **PCO old main hall** |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 10:15<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 10:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 5:15 முதல் 6:15 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:30 முதல் 8:30 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. S. Bovas**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : pastor@csitamilchurchoman.org**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**